

நிறுவனர் : நா.மகாலிங்கம்
நவம்பர் 2022
ஓம் சக்தி
₹50/-
தீபாவளி
சிறப்பு மலர்
2022
பொன்னியின் செல்வன்
பெயர் வந்த கதை

வரலாறு

டாக்டர் நா.கணேசன்



பொன்னியின் செல்வனின் பொற் காசுகள்

கோழி உருவத்தில் கொற்றவை – ராஜராஜ சோழன் வெளியிட்ட தங்கக் காசு.

தஞ்சைப் பெரிய கோயில் கட்டிய ராஜராஜ சோழன் 'கேரளாந்தகன்' என்னும் தமிழ் எழுத்துடன் தங்கக் காசு வெளியிட்டதை அளக்குடி சீதாராமன் தினமலரில் 4-10-2022-ம் தேதியில் எழுதியுள்ளார். அதே போல, இன்னொரு தங்கக் காசும் ராஜராஜ சோழன் வெளியிட்டுள்ளான். அதில் உள்ள சின்னங்கள் தெளிவாகத் தெரிகின்றன. அளக்குடி சீதாராமன் வெளியிட்டுள்ள காசில் இரண்டாம் காசில் உள்ள மழுவுக்குப் பதிலாக, 'கேரளாந்தகன்' என்னும் விருதுப் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

முதல் காசு ஆஸ்வால் நிறுவனத்தாலும், இரண்டாம் காசு மருதர் ஆர்ட்ஸ் என்னும் நிறுவனத் தாலும் சுமார் இரண்டு லட்சம் ரூபாய்க்கு ஏலத்துக்கு வந்துள்ளன. கோழி சின்னத்தைக் கொண்ட இந்த ராசராசன் பொன் நாணயங்கள் மிக அரியவை. கோழி என்றே சோழர் தலைநகர் உறையூரின் பெயர். யானை சேரரின் சின்னம். யானையைக் கோழி பறந்து போரிடுவதாகச் சங்க காலக் காசுகள் உள்ளன.

சங்க காலத்தில், சோழர் தலைநகர் கோழியும் (உறையூர்), சேரர் தலைநகர் வஞ்சியும் (கரூர்) மிக அருகில் இருந்தன. உறையூர் பஞ்சவர் ணேசுவரர் கோயிலிலும் கோழி யானையைப் பறந்து அடிக்கும் சிற்பம் உள்ளது. சோழர்களின் தொடர்ச்சியான வெற்றிகள் சேரர்களை மேற்குக் கடற்கரைக்குச் செலுத்தின. இதைக் கொண்டாடும் விதமாக, 'கேரளாந்தகன்' என்று பொறித்து இக் கோழிக் காசுகளை அக்கசாலையில் (Mint) வெளியிட்டுள்ளான். சேரர்களுக்கு யமன் என்பது கேரளாந்தகன் என்பதன் பொருள். பிரகதீஸ்வரர் ஆலயத்திலும் முதல் கோபுரம் கேரளாந்தகன் திருவாசல் ஆகும்.

துர்கை என்னும் கொற்றவை எருமைத் தலைமீது நிற்பதைப் பல்லவர், சோழர் கோயில்களில் காண்கிறோம். சிலப்பதிகாரம் இதனை, "வரிவளைக்கை வாள் ஏந்தி மாமயிடற் செற்று, கரிய திரிகோட்டுக் கலைமிசை மேல் நின்றாயால்!" என்கிறது. ராஜராஜ சோழனின் இரண்டு கோழிக் காசுகளிலும், கோழி எருமைத் தலை மீது காட்டப்படுகிறது. எனவே, துர்கையின் சின்னமாக, இந்தச் சேவல் நிற்கிறது என்ற செய்தியை அறிய முடிகிறது. இந்தளூர் என்னும் இடத்தில், "கீழச்சேரிக் கோழி பொற்கொற்றி" என்று கொற்றவையின் பெயர்கொண்ட கோழியுடன் 2000 ஆண்டு பழைமையான தமிழ் பிராமிக் கல்வெட்டு கிடைத்துள்ளது. துர்கையின் சின்னமாக, எருமைக் கொம்பை வைத்துச் சங்க காலத்தில் திருமணங்கள் நிகழ்ந்துள்ளன. சண்டையிடும் போர்க்களம் வட்ட வடிவில் ராஜராஜன் பொற்காசில் உள்ளது. இப் பொற்காசில், இடக் கொம்பைச் சுற்றி நான்கு கோளங்கள். இவை போர்க்களத்தில் துண்டித்த தலைகள் எனலாம். மேலும், கோழியின் கழுத்து முழுவதும் கபால மாலை அணிந்துள்ளது.



எருமையின் வலக்கொம்பின் மீது மழு ஒன்று காட்டப்பட்டுள்ளது. சோழர்கள் வணங்கிய சிவ பிரானிடம் மழு இருக்கும். சிவனுக்கு மழுவாடி என்ற பெயர் தேவாரத்தில் உண்டு. சிவனின் கையில் மழு இருப்பது வடநாட்டுக் கலைகளில் காண்பது மிக அரிது. ஆனால். அர்த்தநாரி, சோமாஸ்கந்தர், கலியாணசுந்தரர், பிரதோஷ மூர்த்தி, ... என எல்லா வடிவங்களிலும், தமிழ்நாட்டில் சிவபெருமானின் கையில் மழு இருக்கும். 'மழு வாள் நெடியோன்' என்று மதுரைக் காஞ்சி என்னும் சங்க கால இலக்கியம் பதிவு செய்கிறது.

திருத்தணி அருகே குடிமல்லம் என்னும் ஊரில் உள்ள லிங்கம் இந்தியாவின் முதல் லிங்கம் ஆகும். இதில் நிற்கும் இறைவனிடம் மழு உள்ளது. கேரளாந்தகன் காசிலே, கோழி முன்னர் 'ம' என்ற எழுத்து உள்ளது. அது 'மழு' எனக் குறிப்பதாக இருக்கலாம். ஏனெனில், மழு வாள் (ஆயுதம்) காசின் இரண்டு பக்கங் களிலும் முக்கிய இடம் பெற்றுள்ளது. கொற்றவை - சிவபிரான் தம்பதியின் சின்னங்களாகக் கோழியும் மழுவும் ராஜராஜன் பொறித்துள்ளான். காந்தளூர்ச் சாலை கலம் அறுத்தது ராஜராஜன் அடைந்த முதல் வெற்றி. இதனைக் கொண்டாடும் வகையில் சிவன் - துர்கைக்கு நன்றி பாராட்டி 2 காசுகளை வெளியிட்டுள்ளான்.

Oswal Auction company has put on sale a coin with the legend, Keralandakan. This gold coin weighs 0.27 grams. Sri. Alakkudi A. Seetharaman has explained that this is the coin issued by Rajaraja Chozan I after his first major victory against Cheras in battle, “Kaandaluurc caalai kalam aRuttu aruLi”.



Figure 1. Rajaraja I coin, with the legend, KeraLaantakan (Reverse side)

There is another related gold coin, of the same weight (0.27 grams), issued by Rajarajan I. This is put on sale by Marudhar Arts, Bangalore (Figure 2). In this coin, there is no inscription in Tamil script. Instead, there is a battle-axe (Mazhu), and an elephant-goad “ankusham”. Note that both *ankusham* and *Mazhu* are typically seen in Chera coins in Sangam era or even in Venad Chera coins when Cheras became under the rule of Chozha sovereignty. *“vEzham uDaittu malainADu”*- Auvaiyar. It appears that Chola chakravarti appropriates the typical Chera symbol, Parashu/Mazhu and uses it. It is interesting that the elephant goad, usually standing vertically along with bow-arrow in Chera coins is shown in a fallen position under the Cholas. In his later years, he builds the famous Dakshina-Meru, as Cheras are driven slowly from their Sangam Age capital, Vanji (Karur) first to Dharapuram, and then to AnjaikkaLam by Imperial Cholas. The hill in Vanji city was called Meru ‘Axis Mundi’ and was used for Rajya Pattabhishekam by Cheras. The original Chera capital, Karur’s degrading was accomplished by Chozha kings’ campaign. This can be seen in Tiruppukazh, Kudaiyuur kaifiyat (Colin Mackenzie mss.) etc.,



Figure 2. Rajaraja I coin, with battle-axe and elephant-goad on the reverse side.

On the Reverse side:
Outline of the large Mazhu ‘Battle Axe’. Note the Ankusham ‘elephant goad’ of Cheras shown in the “fallen” horizontal position. Both are usually seen in Chera coins even in Sangam age.

On the Obverse side:
Outline of the (single-bitted) Axe, with its handle, is shown in red. Note the rooster standing above the buffalo (like Durga) is wearing a garland of human heads, those fallen in the warfront. There is a single-bitted Axe called Mazhu in Tamil above the right horn of the buffalo head. There are four human heads around the left horn of the buffalo.

Very unique and rare coins by the Chozha chakravarti, Sri Rajarajan I. On the second coin, I wrote a first version of thoughts that have appeared in print (OmSakthi Deepavali Malar, 2022, Coimbatore). Happy Deepavali! ~ N. Ganesan

கேரள வெற்றியும் இராஜராஜனின் காசும்

ஆறுமுக சீதாராமன்
தமிழக நாணயவியல் ஆய்வாளர்
தஞ்சாவூர்

மும்பை ஓஸ்வால் ஏலக் கம்பெனி 2021ஆம் ஆண்டு ஏலம் விட்ட (Auction No. 89) ஒரு தங்கக் காசைப் புகைப்படத்துடன் வெளியிட்டிருந்தது. இந்தக் காசு சாளுக்கிய சோழர் முதலாம் குலோத்துங்கனால் வெளியிடப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது. இந்தக் காசின் முன்பக்கத்தில் நின்ற மயிலும், பின்பக்கத்தில் தமிழ் எழுத்தில் **அவனி முழுதுடையாள்** என்று பொறிக்கப்பட்டுள்ளது என்று கூறி ஏலம் விடப்பட்டுள்ளது. இந்தக் காசில் உள்ள எழுத்துகளைத் தவறாக வாசித்துள்ளனர். எனவே, இதைச் சரியாக வாசித்துத் தாருங்கள் எனச் சங்கரன் இராமன் - சென்னை, பீனா சரசன் - திருவனந்தபுரம், கிரீஸ் வீரா - மும்பை ஆகியோர் எனக்குப் புகைப்படத்தை அனுப்பினர். இந்தக் காசின் முக்கியத்துவத்தைக் கருதி ஆய்வு செய்து தமிழ்நாடு வரலாற்றுப் பேரவையில் புதிய கண்டுபிடிப்பாக வெளியிட்டுள்ளேன்.

காசின் முன்பக்கத்தில் வலப்பக்கம் நோக்கி நிற்கும் சேவல் உள்ளது. சேவலின் முன் **ம** என்ற தமிழ் எழுத்து உள்ளது. பின்பக்கத்தில் **கெரளந்தகந** என்று சோழர் காலத் தமிழ் எழுத்துகளில் வட்டத்தைச் சுற்றிப் பொறிக்கப்பட்டுள்ளது. எழுத்துகளின் காலம் - கி.பி. 11ஆம் நூற்றாண்டு. எடை - 0.26 கிராம், உலோகம் - தங்கம். சிறந்த வீரத்தின் வெற்றியாகக் கோழியின் உருவத்தை அடையாளமாகப் பொறித்துக் காசை வெளியிட்டதாகக் கருதலாம். சங்க காலச் சோழ மன்னன் ஒருவன் ஒரு வீர நிகழ்வின் காரணமாகக் கோழி பொறித்து ஒரு காசை வெளியிட்டுள்ளதை இந்தக் காசில் கோழி பொறிக்கப்பட்டுள்ளதோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

இராசராசன் தான் முடிசூடிய நான்காம் ஆண்டின் தொடக்கத்திலேயே **காந்தளூர்ச் சாலை கலமருத்தருளிய கோராஜகேசரிவர்மன்** என்று தன்னைக் கூறிக்கொள்வதோடு, தன் மெய்க்கீர்த்தியிலும் இச்செயலையே முதலில் குறிப்பிட்டுள்ளான். இவன் கி.பி. 988ஆம் ஆண்டில் கேரள நாட்டிலுள்ள காந்தளூர்ச்சாலையை (திருவனந்தபுரம் அருகிலுள்ளது) வென்றுள்ளான்.


சேரநாட்டு மன்னன் பாஸ்கர ரவிவர்மன் சோழநாட்டுத் தூதன் ஒருவனை உதகை எனுமிடத்தில் அவமதித்துச் சிறையிட்டதால் வெகுண்ட இராசராசன் சேரநாட்டை அடைந்து, கடற்கரைப் பட்டினமான காந்தளூர்ச்சாலையில் கடும் போரிட்டுச் சேரனை வென்று, மலைநாட்டைத் தனக்கு அடிமைப்படுத்தினான். இராசராசன் சேரநாட்டிற்குப் பாண்டிய நாட்டைக் கடந்தே செல்ல வேண்டியதாயிற்று. அப்போது பாண்டியன் அமரபுயங்கன் இவனுடன் போரிட்டதால் அவனையும் தோல்வியுறச் செய்தான். மாமன்னன் இராசராசன் தானே தலைமையேற்றுச் சென்று வென்ற பெரும் நிகழ்ச்சி இதுவாகும்.

கேரள மன்னனை வென்று இவ்வாறு சிறப்புப் பெற்றமையால் இராசராசன் **கேரளாந்தகன்** எனச் சிறப்புப் பட்டம் சூடிக்கொண்டான். கேரளன் என்பது சேரனையும், அந்தகன் என்பது இயமனையும் குறிப்பதால் சேரனுக்கு இயமன் போன்று விளங்கியவன் எனும் பொருளில் இப்பெயரினைச் சூடிக்கொண்டான்.

சோழநாட்டின் வளநாடு ஒன்றுக்குக் கேரளாந்தக வளநாடு என்றும், ஓர் ஊருக்குக் **கேரளாந்தகச் சதுர்வேதி மங்கலம்** என்றும், ஒரு படைக்குக் **கேரளாந்தகத் தெரிந்த பரிவாரத்தார்** என்றும் பெயரிட்டான். தான் சிறப்பாகச் சூடிய கேரளாந்தகன் என்ற பெயரினையே தஞ்சைப் பெரிய கோயிலில் முதற் கோபுரத்திற்கும் இட்டான். இப்பெரு வெற்றிதான் அவனுடைய அரசு விரிவடைவதற்கான கால்கோள் விழாவாக அமைந்தது.

இராசராசன் வெளியிட்டுள்ள காசுகளில் முழுதும் தமிழில் அமைந்த காசு இதுதான். இக்காசு சோழர்கால நாணயவியலுக்கு அரிய செய்தியைக் கூறுகிறது.





இந்தக் கட்டுரை, பூண்டி கல்லூரியில் 14.10.2022 வெள்ளிக்கிழமை நடைபெற்ற 29ஆவது தமிழ்நாடு வரலாற்றுப்பேரவையில் வாசிக்கப்பட்டது.